

திருப்பூர் மாவட்டம், முத்தூர் NAVAA இன்டர்நேஷனல் பள்ளியில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வாழ்த்துக் கூறினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.சந்திரசேகர், நகரச் செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், பேரூர் செயலாளர் செண்பகம் பாலு உள்ளனர்.



குன்னூர் தொகுதிக்குட்பட்ட கோத்தகிரி நகராட்சி கன்னிகாதேவி நகர் பகுதியில் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டி முடிக்கப்பட்ட பலநோக்குக் கட்டடத்தை தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் திறந்து வைத்தார். மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு, அவைத் தலைவர் போஜன், நெல்லை கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

### கோவை மாவட்டத்தில்

# இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 16.66 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

கோவை, மே 20-

கோயம்புத்தூர் மாவட்டம், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் அருள்மிகு மாரியம்மன் மற்றும் பெரிய விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழா இந்து சமயம் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அருள்மிகு பட்டீஸ்சுவரசுவாமி திருக்கோயிலில் ரூ.11.84 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தர்ப்பண மண்டபம், ரூ.51இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள அன்னதானக் கூடம், ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கோசாலை, ரூ.16.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலை, ரூ.11.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பணியாளர் கழிவறை என 16 கோடியே 66 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டில் முடிவற்ற பணிகளை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் பெ.ரமேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், மருதமலை அறங்காவலர் குழுத்தலைவர் ஜெயக்குமார், துணை ஆணையர்கள் கா.விமலா, இரா.செந்தில்குமார், விஜயலட்சுமி, உதவி ஆணையர்கள் இந்திரா, கைலாசமூர்த்தி, செயற்பொறியாளர் ரேவதி, நல்லறம் அறக்கட்டளை தலைவர் அன்பரசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு, அன்னதானக் கூடங்கள், தர்ப்பண மண்டபங்கள், பக்தர்கள் தங்கும் விடுதிகள், பசுமட காப்பகங்கள் என திருக்கோயில்களுக்கு தேவையான அனைத்து பணிகளுக்கும் முக்கியத்துவம் அளித்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதன்படி சில மாதங்களுக்கு முன்பு அருள்மிகு பட்டீஸ்சுவரசுவாமி திருக்கோயிலில் குடமுழுக்கு விழா ரூ.1கோடி மதிப்பீட்டில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக இத்திருக்கோயிலின் தர்ப்பணமண்டபம் தமிழ்நாட்டில் எங்கும் இல்லாத வகையில் ஒரே நேரத்தில் 50 பேர் அமர்ந்து தர்ப்பணம் செய்கின்ற வகையில் மிகப் பிரமண்ட அளவில் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. தனியார் பங்களிப்பு, திருக்கோயில் நிர்வாகம் மற்றும் அரசின் பொதுப்பணித்துறை சார்பிலும் என மொத்தமாக ரூ.11 கோடி மதிப்பீட்டில் இந்த தர்ப்பண மண்டபம் கட்டடப்பட்டுள்ளது.

மேலும், அருள்மிகு பட்டீஸ்சுவரசுவாமி திருக்கோயிலில் ரூ.51இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள அன்னதானக் கூடம், ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கோசாலை, ரூ.16.30 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள சிமெண்ட் சாலை, ரூ.11.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள பணியாளர் கழிவறை, ஆகியவை இன்று திறந்து வைக்கப் பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இன்றையதினம் 9 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெறுகின்றன. அதில் ஒன்றாக தொண்டாமுத்தூர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா வெகு விமர்ச்சையாக நடைபெற்றது. இவ்விழாவில் 20,000க்கு மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த நான்கு ஆண்டுகளில் 2,948 திருக்கோயில்களில் திருப்பணிகள் நடைபெற்றுள்ளது. பக்தர்கள் நேர்த்திகடனாக செலுத்துகின்ற உபயதாரர் நிதி என்பது ரூ.1,336 கோடி திருக்கோயில்களுக்கு வரப்பெற்றுள்ளன. இவை திருப்பணிக்கு முறையாக செலவிடப்படுகிறது. அந்தவகை யில் அருள்மிகு பட்டீஸ்சுவரசுவாமி திருக்கோயிலின் தர்ப்பண மண்டபம் கட்டுவதற்கு நிதியினை வழங்கிய அனைத்து நல்லஉள்ளங்களுக்கும் இத்துறையின் அமைச்சர் என்ற வகையில் என்னுடைய நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் அடிவாரத்தில் ஆசியாவிலேயே 184 அடி உயரம் கொண்ட முருகன் சிலை அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். அந்த சிலை அமைக்கும் பணிக்கான இடம் மற்றும் வடவள்ளி பகுதியில் புதிய பல்தொழில்நுட்ப கல்லூரி (பாலிடெக்னிக் கல்லூரி) அமையவுள்ள இடம் ஆகியவை தொடர்பாக இன்று நேரில் ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. வெகு விரைவில் சிலை அமைக்கும் பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் - மாவட்ட

# வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம்!

## அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் முன்னிலை! குழுத்தலைவர் ச.முரசொலி எம்.பி. தலைமை!

தஞ்சாவூர் ,மே.20-

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்ட அரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் (DISHA) உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் முன்னிலையில், கண்காணிப்புக் குழுத்தலைவர் / தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, கண்காணிப்புக் குழு இணைத் தலைவர் / மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி. ஆர்.சுதா ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.மு. பாலகணேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் சண்முகம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், க.அன்பழகன், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இக்கூட்டத்தில் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் குழுத்தலைவர் மற்றும் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி பேசியதாவது:

தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் பல்வேறு துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்து கண்காணிக்கும் பொருட்டு மாவட்டந்தோறும் மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் இன்று இக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட தொழில் மையம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, மின்சார வாரியம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், பேருராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சி, சுகாதாரத்துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட உணவு பொருள் வழங்கல், சமூக பாதுகாப்புத் திட்டம், புவியியல் மற்றும் சுரங்கத் துறை, சத்துணவு திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், மறுவாழ்வு நலத்துறை, நில அளவை பதிவேடுகள் துறை, குடிநீர் வடிகால் வாரியம், டிஜிட்டல் இந்தியா, இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், ஆகிய துறைகளின் பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், அரசு திட்டங்களான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், தூய்மை இந்தியா இயக்கம், தேசிய ரூர்பன் இயக்கம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு திட்டம், பிரதம மந்திரி கிராம முன்னோடி திட்டம், ஜல் ஜீவன் மிஷன் திட்டம், தெற்கு இரயில்வே துறை, தேசிய நெடுஞ்சாலைத் துறை, பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார திட்டங்கள். மாவட்டதிறன் பயிற்சி திட்டம், வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், நுண்ணீர் பாசன திட்டம், விதை கிராம திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், தமிழ்நாடு பருப்பு சாகுபடி திட்டம், கூட்டு பண்ணை திட்டம், தமிழ்நாடு பசல் பீமா யோஜனா திட்டம், பிரதம மந்திரி நுண்ணீர் பாசன திட்டம், பாரம்பரிய வேளாண் அபிவிருத்தி திட்டம், தமிழ்நாடு மின்வாரிய திட்டங்கள், பள்ளிக் கல்விதுறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மாற்று திறனாளிகள் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், குடிசைமாற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் செயல்படுத்தப்படும் புராதன நகர வளர்ச்சி திட்டம், அம்ருத் திட்டம், சீர்மிகு நகரம் திட்டப் பணிகள், சுகாதாரத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தொற்றா நோய்கள் திட்டம் ஜனனி சுரக்ஷா யோஜனா திட்டம், தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம், மின்னனு குடும்ப அட்டைகள் வழங்கும் திட்டம், சுரங்கப் பகுதிகளால் பாதிக்கப்பட்ட பணிகளுக்கான பாரத பிரதமர் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் டிஜிட்டல் இந்தியா திட்டம் ஆகிய திட்டங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து, அவற்றின் களப்பணிகளை நல்ல முறையில் செயல்படுத்தப் பட வேண்டும்.

இந்த ஆய்வில் ஊரக வளர்ச்சித் துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து பணிகளையும் விரைவாகவும் தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளது என தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், அனைத்து நகராட்சி, பேரூராட்சி தலைவர்கள் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இரா. தில்லைவில்லாளன்

## மே 20 (2008)



திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவராக திகழ்ந்தவர். திராவிட நாடு இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியவர்.

அண்ணாவின் 'சந்திரரோதயம்', 'சந்திரமோகன்', 'நீதிதேவன் மயக்கம்' ஆகிய நாடகங்களில் அண்ணாவுடன் இணைந்து நடித்தவர்.

நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராக பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டத்தின் போது கைதாகி சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், 1948ல் முரசொலி வார இதழில் இவரைத் தொடர்ந்து சிறுகதை, கட்டுரைகளை எழுத வைத்தார். தலைவர் கலைஞர் அவர்களிடம் தனிப்பாசம் கொண்டிருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### 2026-ல் மீண்டும் 'திராவிட மாடல்' ஆட்சி தொடர -

# திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்தினர் அயராது உழைப்பீர்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர், மே.20-

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் மீஞ்சூர் ஒன்றியம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது இக் கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெ. மூர்த்தி, கும்மிடிப்பூண்டி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சி.எச்.சேகர் மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பா.செ. குணசேகரன், டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், முன்னிலை வகித்தார்கள்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரை யாற்றினார்.

அப்போது திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட BLC 2 பாக முகவர்கள் கூட்டம் மற்றும் BLC கூட்டம் நடத்துவது குறித்து கலந்துரையாடினார்.

அப்போது அவர் கூறியதாவது :-

ஒவ்வொரு பாகத்திற்கும் தகவல் தொழில் நுட்ப சார்ந்தவர்கள் ஒருவரே நியமிக்க வேண்டும்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஊராட்சி கிளை வார்டுகளில் இளைஞரணி பொறுப்புக்கான நிர்வாகிகள் உடனடியாக நியமிக்க வேண்டும்.

மே 20 ஆம் தேதி ஆவடி பட்டாபிராம் பகுதியில் நடைபெறும் மண்டல கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

ஜுன் 1 ஆம் தேதி அன்று மதுரை மாவட்டத்தில் நடைபெறும் பொதுக்குழு கூட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் மாநில நிர்வாகிகள் மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து தேர்தலுக்கான பணிகளில் மிக மும்முரமாக செயல்பட்டு மீண்டும் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மீண்டும் அரியணை ஏற்கும் வரை அயராது உழைக்க வேண்டும் என்று கூட்ட த்தில் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன் என மாவட்ட கழக பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தெரிவித்தார்.


இதில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கி. வே.ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், மு.மணிபாலன், நா.செல்வசேகரன், ஆ.சத்தியவேல், ஜான்பொன்னுசாமி, ந. பரிமளம், கா.சு. ஜெகதீசன், மு.முரளிதரன், ஜி.ரவிக்குமார், இரா.அறிவழகன், பி.முத்து, க.சு.தமிழ உதயன், உள்பட கழக நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து. தமிழரசன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# மைனர் மோசஸ்

## மே 20 (1993)



மாணவப் பருவத்திலேயே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு தீவிர அரசியலில் ஈடுபட்டு சென்னை நகரில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

சென்னை மாநகர மேயர் பொறுப்பு வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

"சிரித்த முகம் – செம்மாந்த நோக்கு – சிங்கத்தின் நடை – உடையணிந்து காட்சி தந்தால் ஒரு ராஜகம்பீரம் – இத்தனைக்கும் மேலாக உள்ளமோ கள்ளமொன்றில்லாத் தூய்மையின் இருப்பிடம்! தும்பை மலர்" என தலைவர் கலைஞர் அவர்கள் தன்னுடைய இரங்கல் உரையில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**